உ

முருகன்றுணை.

திருப்புல்வயல்

குமரேசர்சதகம்.

குருபாததாசர் அருளிச்செய்தது.

இஃது

சிதம்பரம்

கருணாநந்தசுவாமிக

ளவர்களாற்

பார்வையிடப்பட்டுச்

சிந்தாதிரிப்பேட்டை

நாராயணசாமிமுதலியா

ரவர்களாற்

தமது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

௧௮௭௪ஷு - பிப்ரவரிமீ.

உ

கடவுள் துணை.

குமரேசர் சதகம்.

காப்பு.

பூமேவுபுல்லைப் பொருந்துகுமரேசர்தம்மேல்
தேமேவியசதகஞ் செப்பவே - கோமேவுங்
காக்குஞ்சரவணத்தான் கம்பகும்பத்தைந்துகரக்
காக்குஞ்சரவணத்தான் காப்பு.

அவையடக்கம்.

மாரிக்குநிகரொன்று பனிசொரிதல்போலவு மனைக்குநிகரொன்றுசிறுபெண்,மணல்வீடுகட்டுவதுபோலவுஞ்சந்திரன்முன்மருவு மின்மினிபோலவும், பாருக்குணல்லோர்மு னைபித்தர்பலமொழி பகர்ந்திடுஞ்செயல்போலவும்,பச்சைமயிலாடுதற்கிணையென்றுவான்கோழி பாரிலாடுதல்போலவும், பூரிக்குமினியகா வேரிக்குநிகரொன்று போதுவாய்க்கால்போலவும்,புகல்சிப்பிமுத்துக்குநிகராப்பளிங்கைப் பொருந்தவைத்ததுபோலவும்,வாரிக்குமுன் வாவி பெருகல்போலவுமின்சொல் வாணர்முனுகந்துபுல்லை, வால குமரேசர்மேற்சதகம்புகன்றனன் மனம்பொறுத்தருள்புரிக [வே

குமரேசர்மகிமை.

பூமிக்கோராறுதலையாய்வந்துசரவணப் பொய்கைதனில்விளையாடியும், புனிதர்க்குமந்திரவுபதேசமொழிசொல்லியும் போதனைச்சிறையில்வைத்தும்,தேமிக்கவரிகரப் பிரமாதிகட்குஞ் செயிக்கமுடியாவசுரனைத், தேகங்கிழித்துவடி வேலினாலிருகூறு செய்தமரர்சிறைதவிர்த்தும், நேமிக்குளன்பரிட ருற்றசமயந்தனினினைக்குமுன்வந்துதவியும்,நிதமுமெய்த் துணையாய் விளங்கலாலுலகினுனைநிகரானதெய்வமுண்டோ, மாமிக்கதேன்பெருகு பூங்கடம்பணியுமணி மார்பனேவள்ளிகணவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (க)

அந்தணரியல்பு.

குறையாதகாயத்ரி யாதிஜெபமகிமையுங் கூறுசுருதிப்பெருமையும், கோதிலாவாகம புராணத்தின்வளமையுங் குலவுயாகாதிபலவும், முறையாநடத்தலாற்சகலதீவினைகளையுமுளரிபோலேதகிப்பார்,முதன்மைபெறுசிலைசெம்புபிருதிவிகளிற்றெய்வ மூர்த்தமுண்டாக்குவிப்பார், நிறையாகநீதிநெறி வழுவார்களாகையா

நீண்மழைபொழிந்திடுவதும்,நிலமதுசெழிப்பதும் மரசர்செங்
கோற்பெரிய நிலையுமாதவர்செய்தவமும்,மறையோர்களாலேவி
ளங்குமிவ்வுலகத்தின் மானிடத்தெய்வமிவர்காண், மயிலேறிவி
ளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௨)

அரசரியல்பு.

குடிபடையிலபிமான மந்திராலோசனை குறிப்பறிதல்சத்திய
வசனம்,கொடைநித்தமவரவற் கேற்றமரியாதைபொறைகோடா
தசதுருபாயம்,படிவிசாரணையொடுபிரதானிதளகர்த்தரைப்பண்
பறிந்தேயமைத்தல்- பல்லுயிரெலாந்தன் னுயிர்க்குநிகரென்றே
பருத்தல்குற்றங்கள்களைதல் - குடிபெறுதனக்குறுதியான நட்ப
கையின்மை சுகுணமொடுகல்வியறிவு- தோலாதகாலமிட மறிதல்
வினைவலிகண்டு துஷ்டநிக்ரகசௌரியம்-மடிவுபெறுசெங்கோன
டத்திவருமரசர்க்கு வழுவாதமுறைமையிதுகாண்-மயிலேறி (௩)

வணிகரியல்பு.

கொண்டபடிபோலும்விலைபேசிலாபஞ்சிறிது கூடிவரநயமு
ரைப்பார்-கொள்ளுமொருமுதலுக்குமோசம்வாராதபடிகுறுக
வேசெல்வுசெய்வார்-வண்டப்புரட்டர்தாமறிந்து பொன்னட
குவைக்கினுங்கடனீந்திடார் மருவுநாணயமுளோர்கேட்டனுப்பு
கினுமவர் வார்த்தையிலெலாங்கொடுப்பார்- கண்டெழுதுபற்று
லாவினின்மயிர்பிளந்தேகணக்கிலனுவாகினும்விடார்- காசுவீணி
ற்செலவிடாருசிதமானதிற்கனதிரவியங்கள்விடுவார்மண்டலத்தூ
டுகனவர்த்தகஞ்செய்கின்றவணிகர்க்குமுறைமையிதுகாண் மயி
[லேறி

வேளாளரியல்பு.

நல்லதேவாலயம்பூசனைநடப்பதும் நாடோறுமழைபொழிவ
தும் நாடியதபோதனர்கண்மாதவம்புரிவது நவில்வேதவேதிய
ரெலாம்-சொல்லரியயாகாதி கன்மங்கள்செய்வதுந் தொல்புவி
செழிக்குநலமும் சுபசோபனங்களுங் கொற்றவர்கள்செங்கோற்
றுலங்குமனுநெறிமுறைமையும் வெல்லரியசுகிர்தமொடுவர்த்தக
ங்கொள்விலையும் விற்பனையுமதிகபுகழும்-மிக்கவதிகாரமுந் தொ
ழிலாளர்சீவனமும் வீரரணசூரவலியும்- வல்லமைகள் சகலமும்
வேளாளர்மேழியின் வாழ்வினால்விளைதலன்றோ-மயிலேறிவி(௫)

பிதாக்கள்.

தவமதுசெய்தேபெற் றெடுத்தவன் முதற்பிதா தனைவளர்த்தவ
னொருபிதா-தயையாகவித்தையைச்சாற்றினவனொருபிதா சார்ந்
தசற்குருஒருபிதா அவமறுத்தாள்கின்றவரசரொருபிதாநல்லவா
பத்துவேளைதன்னில்- அஞ்சலென்றுரியதுயர் தீர்த்துளோனொ
ருபிதாவன்புளமுளோ னொருபிதா- கவளமிடுமனைவியைபெற்ற

ளோரொருபிதா கலிதவிர்த்தவனொருபிதா காசினியிலிவணைந்தம்பிதாவென்றுவங்கருதுவாருநீதியாரும்-மவுலிதனின் மதியரவு புனைவிமலருதவுசிறு மதலையெனவருகுருபராமயிலேறிவிளையா

ஒன்றையொன்று பற்றிருப்பன.

சத்தியந்தவறாதிருப்பவரிடத்தினிற் சார்ந்துதிருமாதிருக்கும்-சந்ததந்திருமாதிருக்கும்விடந்தனிற்றனதுபாக்கியமிருக்கும்-மெய்த்துவருபாக்கிய மிருக்கும்விடந்தனில்விண்டுவின்கலையிருக்கும்-விண்டுவின்கலைபூண் டிருக்குமவிடந்தனின் மிக்கானதயையிருக்கும்-பத்தியுடனினியதயை யுள்ளவரிடந்தனிற் பகர்தருமமிகவிருக்கும்- பகர்தருமமுள்ளவரிடந்தனிற்சத்துரு பலாயனத்திறலிருக்கும் - வைத்திசைமிகுந்ததிற லுள்ளவரிடத்தில்வெகுமன்னுயிர்சிறக்குமன்றோ-மயிலேறிவிளையாடுகுகனே புல்வயனீடு(௭)

இவர்க்கிவர் தெய்வமெனல்.

ஆதுலர்க்கன்னங் கொடுத்தவர்களேதெய்வ மன்பானமாணாக்கருக்-கரியகுருவேதெய்வமஞ்சினோர்க்காபத்தகற்றினோனேதெய்வமாம் காதலுறுகற்புடைய மங்கையர்தமக்கெலாங் கணவனேமிக்கதெய்வம்- காசினியின்மன்னுயிர் தமக்கெலாங்குடிமரபு காக்குமன்னவர்தெய்வமாம் - ஓதரியபிள்ளைகட் கன்னைதந்தையர்தெய்வமுயர்சாதிமாந்தர்யார்க்கும் - உறவின்முறையார்தெய்வம்விசுவாசமுள்ளபேர்க்குற்றசிவபத்தர்தெய்வம்-மாதயையினாற்சூத்திரர்க்குமறையோர்தெய்வம்வானவர்க்குத்தெய்வதீ-மயிலேறி(௮)

இவர்க்கிதினினைவெனல்.

ஞானநெறியாளர்க்கு மோக்ஷத்தின்மேல்நினைவு நல்லறிவுளோர்தமக்கு - நாடோறுந்தருமத்தின் மேல்நினைவுமன்னர்க்கு ராச்சியந்தன்னினினைவு- ஆனகாமுகருக்கு மாதர்மேலேநினைவு ளஞ்சாததிருடருக்கிங் - கனுதினங்களவின்மேல நினைவுதனவணிகருக் காதாயமீதுநினைவு - தானமிகுகுடியாளருக்கெலாம்வேளாண்மை தனினினைவுகற்பவர்க்கு- தருகல்விமேனினைவு வேசியர்க்கினியபொருடருவோர்கண்மீதுநினைவு மானபரனுக்குமரியாதைமேனினைவெற்குமாருதன்மீதுநினைவு - மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு(௯)

இவர்க்கிதுவில்லையெனல்.

வேசைக்குநிசமில்லை திருடனுக்குறவில்லைவேந்தர்க்குநன்றியில்லை-மிடியற்குவில்லைமாதர்மீதுவங் கணையில்லைமேலச்சற்குருநிறையதில்லை-ஆசைக்குவெட்கமில்லைஞானியானவனுக்கு ளகமில்லைமூர்க்கன்றனக்-கன்பில்லைகாமிக்குமுறையில்லைகுணமிலோர்க் கிழிவில்லை சித்தசுத்தன் பூசைக்குநவிலங்கசுத்தியில்லையாவுமுணர்புலவனுக்கயலோரில்லை-புல்லனுக்கன்றூசி தானுசிதமில்லைகுருபுலையற்கிரா

க்கயில்லை-மாசைத்தவிர்ந்தமதி முகதெய்வயானையொடு வள்ளிக்
கிசைந்தவழகா-மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு (௰)

இப்படிப்பட்டவரிவரெனல்.

நியாயநெறிதவறும லுலகபரிபாலனநடத்துமவனே யரசனும்-ராசயோசனைதெரிந் துறுதியாகியசெய்திநவிலுமவனேமந்திரி-நேயமுடனேதன் சரீரத்தையெண் ணாதநிர்வாகியேசூரனும்-நிலைபெறுமிலக்கண மிலக்கியமறிந்துசொலு நிபுணகவியேகவிஞனும்-ஆயதொருவாகடந் தானுவிணிதானமு மறியமுதியோன்வைத்தியன்-அகமின்றிமெய்யுணர்ந் தைம்புலனொழித்துவிட் டவனேமெய்ஞ்ஞானியெனலாம்- மாயவர்சகோதரி மனோன்மணிக்கன்பானவரபுத்ரவடிவேலவா- மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (௰௧)

விரைந்தடக்கத்தகுவனவிவையெனல்

அக்கினியைவாய்முந்து மர்ச்சனாவஞ்சமனையாளைவளர்பயிர்கொள்களையை-அஞ்சாவிரோதிகளையனியாயமுடையோரையகரீத்தியப்பெண்களார்ப்பைக்- கைக்கினியதொழிலாளி யைக்கொண்டவடிமையைக்களவுசெய்யுந்திருடரைக்-கருதியவிசாரத்தைடக்கமில்பலிசையைக்கடிதானகோபந்தனை மெய்க்கினிதலாப்பிணியை யவையுதாசீனத்தைவினைமூண்டிடுஞ்சண்டையை - விஷமேறுகோரத்தை யன்றடக்குவதலான்மிஞ்ச விடலாகாதுகாண்-மைக்கினியகன்னிகுறவள்ளிதெய்வானையைமணஞ்செய்தபேரழகனேமயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேச(னே

இவர்க்கிது துரும்பெனல்.

தாராளமாகக் கொடுக்குந்தியாகிகடமக்குநற்பொருடுரும்பு-தன்னுயிரையெண்ணாது சூரனுக்கெதிராளி தளமெலா மொருதுரும்பு பேரானபெரியருக் கற்பரதுகையினிற் பிரயோசனந்துரும்பு பெரிதானமோட்சசிந்தனையுள்ளவர்க்கெலாம் பெண்போக்குமொருதுரும்பு- தீராதசகலமும் வெறுத்ததுறவிக்குவிறல்சோர்வேந்தனொருதுரும்பு.செய்யகலைநாமகள்கடாட்சமுள்ளோர்க்கெலாஞ்செந்தமிழ்க்கவிதுரும்பாம்வாராருமணிகொண்முலைவள்ளிதெய்வானையை மணம்புணரும்வடிவேலவா - மயிலேறிவிளை ()

இதனைவிலக்குவதிதுவெனல்.

பகல்விளக்குவதிரவிநிசிவிளக்குவதுமதிபார்விளக்குவதுமேகம்-பதிவிளக்குவதுபெண் குடிவிளக்குவதரசுபரிவிளக்குவதுவேகம்-இகல்விளக்குவதுவலிநிறைவிலக்குவதுநலமிதைவிளக்குவதுகதிரூ-நிடம்விளக்குவதுகுடி யுடல்விளக்குவதுண்டியினியசொல்விளக்குவதருள்-புகல்விளக்குவதுகொடைதவம்விளக்குவதறிவுபூ விளக்குவதுவாசம்- பொருள்விளக்குவதிரு முகம்விளக்குவ

துநகைபுத்திரியைவிளக்குவதுநூல்-மகம்விளக்குவதுமறைசொல்விளக்குவதுநிசம்வாவியைவிளக்குவதுநீர்-மயிலேறிவிளையாடு()

பிறப்பிடநன்மையால்நன்மைபொருமை.

சிங்காரவனமதிலுதிப்பினுங்காகமது தீஞ்சொல்புகல்குயிலாகுமோ-திரையெறியும்வாவியிற் பூத்தாலுமேகொட்டி செங்கஞ்சமலராகுமோ-அங்கானகத்திற்பிறந்தாலுமுயலானதானையின்கன்றாகுமோ-ஆண்மையாகியநல்லகுடியிற்பிறந்தாலுமசடர்பெரியோராவரோ-சங்காபோற்கடல் பிறந்தாலுநத்தைதான்சாலக்கிராமமாமோ-தடமேவுகடனீரிலேயுப்புவிளையினுஞ்சார்சர்க்கரையாகுமோ-மங்காதசெந்தமிழ்க்குருமுனிக்குபதேசம்வைத்தமெய்ஞ்ஞானகுருவே-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு()

பலர்க்கும்பயன்படுவன.

கொண்டல்பொழிமாரியுமுதாரசற்குணமுடையகோவுமுருணியினீரும்-கூட்டமிடுமம்பலத் துறுதருவினீழலுங் குடியாளர்விவசாரமும்-கண்டவர்களெல்லாம்வரும்பெருஞ்சந்தியிற்கனிபலபழுத்தமரமும்-கருணையுடனேவைத் திடுந்தணீர்ப்பந்தலுங் காவேரிபோலூற்றமும்விண்டலத்துறைசந்திராதித்தகிரணமும்வீசுமாருதசீதமும்-விவேகியெனுநல்லோரிடத்திலுறுசெல்வமும்வெகுசனர்க்குபகாரமாம் - வண்டிமிர்கடப்பமலர்மாலையணிசெங்களபமார்பனேவடிவேலவா- மயிலேறிவிளையாடுகுகனே()

தாமழியினுங்குணமழியாதவை

தங்கமானதுதழலினின்றுருகிமறுகினுந்தன்னொளிமழுங்கிடாது-சந்தனக்குறடுதான்மெலிந்துதேய்ந்தாலுமோ தன்மணங்குன்றிடாது,பொங்கமிகுசங்குசெந்தழலில்வெந்தாலுமோபொலிவெண்மைகுறைவுறாது-போதவேகாய்ந்துநன் பால்குறுகினாலும்பொருந்துசுவைபோய்விடாது-துங்கமணிசாணையிற் றேய்ந்துவிட்டாலுந் துலங்குகுணமொளியாதுபின் - தொன்மைதருபெரியோர் மடிந்தாலுமவர்களதுதூயநிறைதவறுகுமோ.மங்கலகல்யாணிகுற மங்கைசுரகுஞ்சரியை மருவுதிண்புயவாசனே()

நரகில்வீழ்வோர்

மன்னரைச்சமரில்விட்டோடினவர்குருமொழிமறந்தவர்கொலைப்பாதகர்-மாதாபிதாவைநிந்தித்தவர்கள்பாரதார மருவித்திரிந்தபேர்கள்-அன்னங்கொடுத்தபேருக்கழிவையெண்ணினோராசடக்கியவமைச்சர் ஆலயமிகழ்ந்தவர்கள்விசுவாசகாதக ரருந்தவர்தமைப்பழித்தோர்-முன்னுதவியாய்ச்செய்த நன்றியைமறந்தவர்முகஸ்துதிவழக்குரைப்போர்,முற்றுசிவபத்தரைநடுங்கச்சினத்தவர்கள் முழுதும்பொய்யுரைசொல்லுவோர் மன்னொருவர்வைத்தபொருளபகரித்தோரிவர்கள் மாநரகில்வீழ்வரென்றுமயி()

சரீரசுகம்.

மாதத்திரண்டுவிசை மாதரைப்புல்குவதுமருவறுவிரோசனந்
தான்-வருஷத்திரண்டுவிசை தயிலந்தலைக்கிடுதல்வாரத்திரண்டுவி
சையாம்மூதறிவினோர்த்தன துவயதினுக்கிளையவொருமொய்குழ
லுடன்சையோகம்முற்றுதயிர்காய்ச்சுபால்னீர்மோருருக்குநெ
ய்முதிராவழுக்கையிளநீர்-சாதத்திலெவ்வளவா னாலும்புசித்தபின்
னுகந்தனக்குவாங்கல்-தயையாகவுண்டபி னுலாவலிவைமேவலர்
சரீரசுக மாமென்பர்காண்,மாதவகுமாரிசா ரங்கத்துதித்தகுறவ
ள்ளிக்குகந்தசரசா-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்னீடும()

யார்க்குமனுபோகம்விடாமை.

தேசுபெறுமேரு பிரதக்ஷணஞ்செய்துமதி தேகவடுநீங்கவில்
லை-திருமாலுறங்கிடுஞ்சேடனுக்குவனன் செறும்பகை யொழிந்
ததில்லை-ஈசன்கழுத்திலுறுபாம்பினுக்கிரைமேவறிலாமலேவாயுவா
கும்- இனியகண்ணாகிவருபருதியாதவனுக் கிராகுவேகணவிரோ
தி-ஆசிலாப்பெரியோரிடத்தினிலடுக்கினு மமைத்தபடியன்றிவ
ருமோ- அவரவர்களனுபோக மனுபவித்திடல்வேண்டுமல்லால்
வெறுப்பதெவனா- வாசவனுமும்பரனை வரும்விசயசயவென்று
வந்துதொழுதேத்துசரணா மயிலேறிவிளையாடுகுகனேபுல் ()

இதுவின்றி யிதுசிறவாதெனல்.

குருவிலாவித்தைகூ றறிவிலாவாணிபங் குணமிலாமனைவியா
சை-குடிநலமிலாநாடுநீதியில்லாவரசு குஞ்சரமிலாதவெம்போ
ர்-திருவிலாமெய்த்திறமைபொறையிலாமாதவந்தியானமில்லாத
நிஷ்டை-தீபமில்லாதமனை சோதரமிலாதவுடல்சேகரமிலாதசெ
ன்னி-உருவிலாமெய்வளமைபசியிலாவுண்டிபகலுண்மையில்லா
தவசனம்யோசனையிலாமந்த்ரிதைரியமிலாவீரமுதவியில்லாதந
ட்பு-மருவிலாவண்ணமலர்பெரியோரிலாதசபை வையகத்திருந்
தென்பயன்-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவு()

பகைப்படாதவரிவரெனல்.

அரசர்பகையுந்தவம் புரிதபோதனர்பகையு மரியகருணீகர்ப
கையும்,அடுத்துக்கெடுப்போர்கொடும்பகையுமுட்பகையுமருளி
லாக்கொலைஞர்பகையும், விரகுமிகுமூரிலுள்ளோருடன்பகையு
மிகுவிகடப்ரசங்கிபகையும். வெகுசனப்பகையுமந்திரவாதியின்
பகையும், விழைமருத்துவர்கள்பகையும், உரமருவுகவிவாணர்ப
கையுமாசான்பகையுமுறவின்முறையார்கள்பகையும் உற்றதிரவி
யமுளார்பகையுமந்திரிபகையு மொருசிறிதுமாகாதுகாண். வா
ரிதியின்மதலையென வினியசரவணமிசையில்வருதருணசிறுகுழ
வியே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகும ()

பேயெனப்படுவோரிவரெனல்.

கடனுதவுபேர்வந்து கேட்கும்வேளையின்முகங்கடுகடுக்கின்றபேயும், கனமருவுபெரியதனம்வந்தவுடனிறுமாந்து கண்விழிக்காதபேயும் அடைவுடன்சத்துருவின் பேச்சைவிசுவாசித்தகப்பட்டழன்றபேயும்-ஆசைமனையாளுக்கு நேசமாயுண்மைமொழி, யானதையுரைத்தபேயும்,இடரிலாநல்லோர்கள் பெரியோர்களைச்சற்றுமெண்ணாதுரைத்தபேயும்,இனியபரிதானத்திலாசைகொண்டொருவற்கிடுக்கண்செய்திட்டபேயும்,மடமனையிருக்கப்பரத்தையைப்புணர்பேயும் வசைபெற்றபேய்களன்றோ,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே (உ௩)

அவ்வவ்வினத்தி லுயர்ந்தவை

தாருவிற்சந்தான நதியினிற்கங்கைவிர தத்தினிற்சோமவாரந் தகைபெறுநிலத்தினிற்காஸ்மீரகண்டந்தலத்திற்சிதம்பரதலம்சிருலவுரிஷிகளில் வசிட்டர்பசுவிற்காமதேனுமுனிவரினாரதன்செல்வநவமணிகளிற்றிகழ்பதுமராகமணிதேமலரிலம்போருகம் பேருலவுகற்பினிலருந்ததிகதித்திடு பெலத்தின்மாருதம்யானையிற்பேசிலைராவதந்தமிழினிலகத்தியம் பிரணவம்மந்திரத்தில்வாரிதியிலேதிருப்பாற் கடல்குவட்டினின் மகாமேருவாகுமன்றோமயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே ( )

அவரவர்க்குப் பெலமாவன.

அந்தணர்க்குயர்வேத மேபெலங்கொற்றவர்க்கரியசௌரியமேபெலம்- ஆனவணிகர்க்குநிதியேபெலஞ்சூத்திரர்க்காயினேருழவேபெலம்மந்திரிக்குச்சதுருபாயமேபெலநீதிமானுக்குநடுவேபெலம்,மாதவர்க்குத்தவசு பெலமடவியர்க்குநிறை மாணமிகுகற்பேபெலம்தந்திரமிகுத்தசேவகர்தமக்கெலாஞ்சாமிகாரியமேபெலம்,சான்றவர்க்குப்பொறுமை யேபெலம்புலவோர்தமக்குநிறைகல்விபெலமாம், வந்தனைசெயும்பூசை செய்பவர்க்கன்புபெலம்வாலவடிவானவேலா,மயிலேறிவிளையாடுகுகனேபுல்

இருந்தும்பயன்படாதவை.

தருணத்தி லுதவிசெய்யாதநட்பாளரின் றந்தெனதாமலென்னதாராதரமறிந்துமுறைசெய்யாதமன்னரைச்சார்ந்தென்ன நீங்கிலென்னபெருமையுளாண்மையில்லாதவொருபிள்ளையைப்பெற்றெனபெறாமலென்ன, பிரியமாயுள்ளன்பிலாதவர்கனைசம்பிடித்தெனவிடுக்கிலென்ன,தெருளாகமானமில்லாததொரு சீவனஞ்செய்தெனசெயாமலென்ன, தேகியெனவருபவர்க்கீயாதசெல்வஞ்சிறந்தெனகுறைந்துமென்ன,மருவிளமைதன்னிலில்லாதகன்னிகையின்புவந்தெனவராமலென்ன, மயிலேறிவிளையாடுகுகனே புல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே (உ௫)

உபகாரமில்லாதவை.

கடனீர்மிகுந்தென்ன வொதிதான்பெருத்தென்ன காட்டிலவு
மலரிலென்ன,கருவேல்பழுத்தென்ன நாய்ப்பால்சுரந்தென்னகா
னின்மழைபெய்துமென்ன, அடர்கழுதலத்தினில் யெல்லாங்கு
விந்தென்னவரியகுணமில்லாதபெண், அழகாயிருந்தென்ன வா
ள்தானைகோழைபலவரிய நூலோதியென்னதிடமினியபூதம்வெகு
பொன்காத்திருந்தென்னதிறன்மிகுங்காடிமயிர்தான், செறிவாகி
நீண்டென்னவஸ்த்ரபூஷிணமெலாஞ்சித்திரத்தாற்றுமென்ன,மட
மிகுந்தவருக்கு முபகாரமில்லாத வம்பர்வாழ்வுக்குநிகராம்,ம

பதரெனப்படுவோர்

தன்பெருமைசொல்லியேதன்னைப்புகழ்ந்தபதர் சமர்கண்டொ
ளிக்கும்பதர்தக்கபெரியோர்புத்திகேளாதபதர்தோழர்தம்மொ
டுசலிக்கும்பதர்,பின்புகாணாவிடத் தன்னிலேபுறணிபலபேசிக்க
ளிக்கும்பதர், பெற்றதாய்தந்தைதுயர் படவாழ்ந் திருந்தபதர்
பெண்புத்திகேட்கும்பதர்,பொன்பணமிருக்கவேபோயிரக்கின்
றபதர் பொய்ச்சாக்ஷிசொல்லும்பதர்,புவியோர்நடத்தையையி
கழ்ந்தபதர்தன்மனைவி புணர்தல்வெளியாக்கும்பதர் மன்புணரு
ம்வேசையுடன்விபசரிக்கின்றபதர்மனிதரிற்பதரென்பர்காண்ம

காணாவிடிற் றுயரப்படுமவை

இரவிகாணாவனச மாரிகாணாதபயி ரிந்துகாணாதகுமுதம்
ஏந்தல்காணாநாடு களைகள்காணாவோட மின்சொல்காணாவிருந்து
சுரபிகாணாதவன் றன்னைகாணாமதலை சோலைகாணாதவண்டு
தோழர்காணாநேயர் கலைகள்காணாதமான் சோடுகாணாதபேடு
குரவர்காணாசபைபதியாகிகாணாவறிஞர் கொழுநர்காணாதபெண்க
ள் கொண்டல்காணாதமயில் சிறுவர்காணாவாழ்வு கோடைகாணாத
குயில்கள் வரவுகாணாதசெலவிவையெலாம்புவிமீதில்வாழ்வுகாணா
விளமையாய் மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவு()

வியாதிமூலங்கள்.

கல்லினாண்மயிரினான் மீதூண்விரும்பலாற் கருதியவிசாரத்தினால்
கடுவழிநடக்கையான்மலசலமடக்கையாற்கனிபழங்கறியுண்ணலா
ல்,நெல்லினுஞ்சியினு ளுண்டபின் மூழ்கலாணித்திரைகளில்லாமை
யால்,நீர்ப்பகையினாற்பனிக்காற்றிலுடனேனுதலானீச்சருக்கிலையூற
லால்,மெல்லிநல்லார்கலவி யதிகமும்விரும்பலால் வீழ்மலஞ்சிக்
குகையினால்,மிகுசுமையெடுத்தலா லிளவெயிற்காய்தலான் மெய்
வாடவேலைசெயலால், வல்லிரவிலேதயிர்கள் சரகாதியுண்ணலால்
வன்பிணிக்கிடமென்பர்காண் மயிலேறிவிளையாடுகுகனேபுல்வய

செத்துஞ்சாகாதவர்.

அனைவர்க்குமுபகாரமாம்வாவிகூவமுண் டாக்கினோர்நீதிமன்னர்

மக்கினிசுடாமற் பெரும்புன லெனச்செய்யலாம், பிணியையும கற்றலாங்காலதூ தவரையும் பின்புவருகென்றுகொள்ளலாம்,மண லையுங்கயிறாய்த்திரிக்கலாங் கயவர்குணமட்டுந்திருப்பவசமோ,ம

இத்தீக்குணத்தோ ரிவ்விலங்குபோல்வரெனல்.

தான்பிடித்ததுபிடிப்பென்றுமேலவர்புத்தி தள்ளிச்செய்வோர் குரங்கு, சபையிற்குறிப்பறிய மாட்டாமனின்றவர் தாம்பயனி லாதமரமாம், வீம்பினுமெளியவரையெதிர்பண்ணி நிற்குமொ ருவெறியர்குறைகுமலியாவார், பிசுநாடிவருவோர் முகம்பார் த்திடாலோபர் மேன்மையில்லாதகழுதை, சோம்பலொடுபெரி யோர் சபைக்குட்படுத்திடுந் தூங்கலேசண்டிக்கடா, கூதுடன டுத்தோர்க் கிடுக்கணேசெய்திடுந் துஷ்டனே கொட்டுதேளாம், மாம்பழந்தனைவேண்டியந்நாளிலீசனைவலமாகவந்தமுருகா, ம

அற்பர்வாழ்வால்குணம்வேறுபடுதல்

அற்பர்க்குவாழ்வுசற் றதிகமானால்விழிக் கியாவருருவுந்தோன்றி டா,தண்டிநின்றேநல்ல வார்த்தைகளுரைத்தாலு மவர்செவிக்கே றிடாது, மூற்பக்ஷமானபேர்வருகினும்வாருமெனமொழியவும் வாய்வாராது, மோதியேவாகப்பிடிப்புவந்ததுபோல முன்காலை யகலவைப்பார், விற்பனமிகுத்தபெரியோர்செய்திசொன்னாலு ம்வெடுவெடுத்தேசிறிற்பார்,விருதா மகத்துவப் பேயதுசவுக்க டி விழும்போது தீருமென்பார், மற்புயந்தனினீப மாலையணி லோலனே மார்பனேவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனே

இத்தீங்குள்ளோரிக்கோள்போல்வரெனல்.

அன்னைதந்தையர்புத்தி கேளாதபிள்ளையோ வஷ்டமச்சனியாகு வான், அஞ்சாமலெதிர்பேசி நிற்குமனையாள்வாக்கி லங்காரகச்ச ன்மமாம்,தன்னைமிஞ்சிச்சொன்னவார்த்தைகேளாவடிமை சந்தி ராஷ்டகமென்னலாம், தன்பங்குதாவென்று சபையேறுதம்பி யோ சார்ந்தசன்மச்சூரியன், நன்னயமிலாதவஞ்சனைசெய்த த மையன்மூன் றுமிடத்தில்வியாழம் - நாடோறும் விரோதமிடு கொண்டோன்கொடுத்துளோன் ராகுகேதுக்களெனலாம், மன் னயனையன்றுசிறை தனிலிட்டுநம்பற்குமந்திரமுரைத்தகுருவே.

நல்வினைஞ்சேர்பயன்.

சந்தனவிருக்ஷத்தையண்டி நிற்கின்றபல தருவுமவ்வாசனைதரும், தங்கமகமேருவை யடுத்திடுங்காக்கையுஞ்சாயல்பொன்மயமேத ரும்,பந்தமிகுபாலுடன் விளாவியதணீரெலாம் பால்போனிறங் கொடுக்கும்,படிகமணிகட்குளே நிற்கின்றவடமுமப்படியே கு ணங்கொடுக்கும், அந்தமிகுமரகதக் கல்லைத்திரித்திடலடுத்ததும் பசுமையாகும், ஆனபெரியோர்களொடுசகவாசமதுசெயிலவர் கள்குணம்வருமென்பர்காண் மந்தரநெடுங்கிரியின் முன்கடல்க

டைந்துவரிமருகமெய்ஞ்ஞானமுருகா, மயிலேறிவிளையாடுகுக
னேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (௨௫)

வலியோனாழ்விடாமை.

அன்றுமுடிசூடுவ திருக்கரகுராமன்முனநுங்காடுறைந்ததென்ன
அஞ்சடலொல்லாமயிர்தழண்டிடப்பரமனுக் காலம்லயித்ததென்
ன, வென்றிவருதேவர்சிறை மீட்டநீகளவில் வேடிச்சியைச்சேர்
ந்ததென்ன,மேதினிபடைக்குமய னுக்கொருசிரம்போகி வெஞ்
சிறையிலுற்றதென்ன,என்றுமொருபொய்சொலா மன்னவன்வி
லைபோன தென்னகாண்வல்லமையினால், எண்ணத்திலொன்று
ம்வாராதபரமசிவ னைத்தனப்படிமுடியுமாம், மன்றுதனினட
னமிடுகங்காதரன்பெற்ற வரபுத்ரவடிவேலவா, மயிலேறிவிளை()

பெரியோர்வாக்கியபரிபாலனஞ்செய்தோர்.

தந்தைதாய்வாக்கியபரிபாலனஞ்செய்தவன்றசரதகுமாரராமன்
தமையனருள்வாக்கியபரி பாலனஞ்செய்தோர்தருமனுக்கிளைய
நால்வர்,சிந்தையிலுணர்ந்தகுரு வாக்யபரிபாலனஞ் செய்தவன
ரிச்சந்திரன், தேசியென்றோர்க்கில்லை யெனுவாக்கிய பாலனஞ்
செய்தவன்றானகன்னன், நிந்தைதவிர்வாக்கியபரிபாலனஞ்செய்,
தவனீள்பெலமிகுத்தவனுமான்,நிறையுடன்பத்தாவின் வாக்யப
ரிபாலனநிலத்தினளாயினிசெய்தாள்,மந்தைவழிகோயில்குண
முங்குலவுதம்பிமுருகன்மகிழ்தரவுகந்ததுணைவா, மயிலேவிளையா

முயற்சியின்மிக்கதாமெனல்.

வங்காளமேறினும் வாருகோலொருசாசு மட்டன்றியதிகமா
மோவானேறியுயரப் பறந்தாலுமூர்க்குருவி வண்ணப்பருந்தாகு
மோ-கங்காசலத்திலின்மூழ்கினும்பேய்ச்சுரைக் காய்நல்லசுரை
யாகுமோ, கடலுக்குளாழியை யமுக்கியேமொண்டிடிற் காணு
மேநாழிதான்,ஐங்காதமோடினுந் தன்வினைகடன்றோடே ய
டையாமனீங்கிவிடுமோ,ஆரிடஞ்சென்றாலும்வெகுதொலைகள்சு
ற்றினுமமைத்தபடியன்றிவருமோ,மங்காதசெந்தமிழ்க் கொண்
நக்கீரர்க்கு வந்ததுயர் தீர்த்தமுருகா, மயிலேறிவிளையாடுகுக

இடும்பாலழிவு.

சூரபத்மன்பெலமு மிராவணன்றீரமுந் துடுக்கானகஞ்சன்வலியு
ம்,துடியானவிரணியன் வரப்ரசாதங்களுந்தொலையாதவாலிதிட
மும்,பாரமிகுதுரியோத னாதிநூற்றுவர துபராக்கிரமமுமதுகை
டவர்,பாரிப்புமாபெலிதனுண்மையுஞ்சோமுகன்பாங்கிலுறுவல்
லமைகளும்,எரணவுசீசகன் கனதையுந்திரிபுர மெண்ணமுந்தக்க
னெழிலும்,இவர்களதுசம்பத்து நின்றவோவவரவ ரிடும்பாலழி
ந்ததன்றோ,மாரனைக்கண்ணாலெரித்தருள்சிவன்றந்தவரபுத்ரவடி
வேலவா,மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகும

நட்புநிலை

மாமதியின்முயலானதுதேய்வுழித்தேய்ந்து வளருமப்போது
வளரும்வாவியதனிலாம்பல்கொட்டி தண்ணீர்வற்றின்வற்றிடும்
பெருகிலுயரும்,பூமருவுபதல்பூ சோலையிற்றீய்ந்திடும் பொங்
குகாலந்தழைக்கும், புண்டரீக மிரவிபோ மளவிற்குவிந்திடும்
போதுதயமாகில்மலரும்,தேருடனிளைக்கிலுயிர்கூடவுமிளைக்கு
மதுதேறிலுயிருஞ்சிறக்கும்,சேர்ந்தோர்க்கிடுக்கணது வந்தாலு
நல்லோர் கினைகமப்படியாகுமே,வாமனசுரூபமதுயானைமுக
னுக்கிளைய வாலகுருபரவேலவா,மயிலேறிவிளையாடு குகனேபு

கைப்பலருமவை.

பருவத்திலேபெற்ற சேயும்புரட்டாசி பாதிசம்பாநடவும்,ப
லமினியவாடிதனிலானைவால்போலவே பயிர்கொண்டுவருகரும்
பும்,கருணையொடுமிக்கநா ணயமுள்ளோர்கையினிற்கடனிட்டுவை
த்தமுதலும்,காலமதுநேரிற் றனக்குறுதியாகமுன் கற்றுணர்ந்தி
டுகல்வியும்,விருந்தசனைக்கண்டுமகிழசின்னசமும் விவேகிக்கட்
குபகாரமாய்-வீணல்லவிவையெலாங் கைப்பலனதாகவே விர்த்
தியாய்வருமென்பர்காண்- மருவுவாவியநீப மாலையுந்தண்டாள
மாலையும்புனைமார்பனே- மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீ

சமயத்துக்குதவாதவை

கல்லாதுபுஸ்தகந் தனிலெழுதிவிட்டினிற் கட்டிவைத்திடுவித்தை
யும்-காலங்களுக்குதவ வேண்டுமென்றன்னியன் கையிற்கொடுத்
தபொருளும்-இல்லாளைநீக்கியேபிறர்பாரிசதமென் றிருக்கின்ற
குடிவாழ்க்கையும் எதுமாறுகவே தேசாந்தரம்போயிருக்கின்ற
பிள்ளைவாழ்வும்- சொல்லானதொன்றுமவர் மனமானதொன்று
மாச்சொல்லும் வஞ்சகர்நேயமும்சுகியமா யுண்டென்றிருப்ப
தெல்லாந்தருணத்திலுதவாதுகாண்-வல்லான கொங்கைமட
மாதுதெய்வானைகுறவள்ளிபங்காளநேயா-மயிலேறிவிளையாடு()

திரும்பமாட்டாதவை

ஆடரவின்வாயினி லகப்பட்டதவளையு மானைவாயிற்கரும்பும்-அ
ரிதானகப்பலிற் பாய்மரக்காற்றினிலகப்பட்டு மெலிகாக்கையும்-
நாடறியவேதாரை வார்த்துக்கொடுத்ததுநமன்கைக்குளானவுயி
ரும்-நலமாகவேயணைகடந்திட்டவெள்ளமுநாய்வெட்டைபட்ட
முயலும்-தேடியுண்பார்கைக்குளானபலவுடைமையுந் தேவாதை
யானமனையும்-திரள்கொடுக்கோலரசர் கைக்கேறுபொருளுந்தி
ரும்பிவாரா வென்பர்காண் மாடமிசையன்னக் கொடித்திரள்
கொள்சோணாடு வாழவந்திடுமுதல்வனே-மயிலேறிவிளையாடு ()

இவையிதுநன்றென்பவை

கடுகடுத்தாயிரஞ் செய்குவதினிற்சொலாற் களிகொண்டழைத்த
னன்று கனவேள்வியாயிரஞ்செய்வதிற்பொய்யுரைகருத்தொடு

சொல்லாமைநன்று வெடுவெடுக்கின்றதோ ரவிவேகியுறவினில் வி
வேகியொடுபகைமைநன்று- வெகுமதிகளாயிரஞ்செய்வதினனா
க்காசி வேளைகண்டுதவனன்று-சடுதியிற்பக்குவஞ்சொல்லுங்கொ
டைக்கின்குசற்றுமிலை யென்னனன்று- சம்பத்துடன் பிணியின்
மெலிகுவதிலேயுற்ற தாரித்திரியநன்றுகாண் மடிவினிற்கரியோ
லமென்னவந்தருள்செய்த மான்மருகனைமுதல்வா-மயிலேறி(

பலகூடினும்ஒன்றற்கீடாகாதவை

தாரகைகளொருகோடி வானத்திருக்கினுஞ் சந்திரற்கீடாகுமோ
தாருவிற்கொடிதொனிகள் பலகூடினுமொரு தம்பட்டவோ
சையாமோ - கோரமிகுபன்றியின் குட்டிபலகூடினுமொருகுஞ்சர
க்கன்றாகுமோ-கொட்டிமலர்வாவியிற்பலகூடினுமொருகோ
கனகமலராகுமோ-பாரமிகுமாமலைகள்பலகூடினுமொருபை
ம்பொன்மகமேருவாமோ- பலனில்லாப்பிள்ளைக ளனேகம்பிறந்
தும்விற்பன்னொருவனுக்குநிகரோ-வாரணக்கொடியொரு கரத்
திற்பிடித்தொல்விவடிவேலணிந்தமுருகா-மயிலேறிவிளையா()

அருமையறிதல்

மனமாலையருமையைப் புனைபவர்களேயறிவர் மட்டிக்குரங்கறி
யுமோ, மக்களுடையருமையைப் பெற்றவர்களேயறிவர் மலடி
தானறிவதுண்டோ, கனவருடையருமையைக்கற்பனையாதறிவ
ள்கணிகையானவளறிவளோ,கருதுமொருசந்தியின்பாண்டமெ
ன்பதைவருங் களவானநாயறியுமோ, குணமானகிளியருமை த
னைவளர்த்தவரறிவர் கொடியபூனையுமறியுமோ,குலவுபெரியோர
ருமைநல்லோர்களேயறிவர் கொடுமூட[illegible]மறிவரேயனைக
ளநீயென்று குறவள்ளியின்றொடரவனமூடுதழுவுமழகா-மயிலே
றிச்சார்வாற் பயன்படாதவை.

மடுவினிற்கஞ்சமலருண்டொருவரணுகாமல் வன்முதலையங்கிரு
க்கும்,மலையினிற்றேனுண்டுசென்றொருவரிட்டாமன் மருவிய
தில்வண்டிருக்கும் நெடுமைதிகழ் தாழைமலருண்டொருவர
ணுகாமனீங்காதமுள்ளிருக்கும்,நீடுபலசந்தனவிருக்ஷமுண்டணு
காதுநீளரவுசூழ்ந்திருக்கும்,குடிமல்கிவாழ்கின்ற வீட்டினிற்செ
ல்லாதுகுரைநாய்களங்கிருக்கும்,கொடுக்குந்தியாகியுண்டிடையூ
[illegible]பேசுங் கொடும்பாவியுண்டேண்டாய், வடுவையுங் கடுவையும்
பொருவுமிருகண்ணிகுற வள்ளிக்குகந்தகணவா, மயிலேறிவிளை

கணிகையரிழிவு

தேவதாசிகள்வீடு சந்தைப்பெரும்பேட்டை சேர்ந்திடுபடுக்கை
வீடு,தெருவாசல்கட்டில்பொது வம்பலமுடுத்ததுகில்செய்யரு
தாடுசாலை,மேவலாகியகொக்கை யையாடுதிரள்பந்து விழிமனங்
கவர்தூண்டிலாம்,மிக்கமொழிநீர்மேலெழுத்திதமோகமொரு

மின்னலிருந்துடைசர்ப்பமாம், ஆவலாகியவல்குலோர்தண்டம்வா
ரிகுயிட கதிகபடமாமனதில், அமிர்தவாயிதழ்சித்ரசாலையெச்
சிற்குழி யவர்க்காசைவைக்கலாமோ; மாவடிவுகொண்டே பொ
ளித்தவொருசூரனை வதைத்தவடிவேலாயுதா, மயிலேறிவிளை ()

காலகாலக்கொடுமை.

தாய்புத்திசொன்னால் மறுத்திடுங்காலமுயர்தந்தையைச்சீறுகால
ம்,சற்குருவைநிந்தைசெய்காலமெய்க்கடவுளைச் சற்றுமெண்ணா
தகாலம்,பேய்தெய்வமென்றுபசரித்திடுங்காலம் புரட்டருக்கே
ற்றகாலம்,பெண்டாட்டிவையினுங் கேட்கின்றகாலநற் பெரியர்
சொல்கேளாதகாலம், தேய்வுடன்பெரியவன் சிறுமையுறுகால
மிகுசிறியவன்பெருகுகாலம்,தெருவில்விட்டோடினோர்வரிசை
பெறுகாலம்வசை செப்புவோர்க்குதவுகாலம், வாய்மதம்பேசி
விம்மனியாயகாரர்க்கு வாய்த்தகலிகாலமையா,மயிலேறிவிளை()

அவரவர்க்குரியவை.

கல்வியொடுகனமுறச்சபையின்மேல்வட்டமாங்காணவைப்போ
ன்பிதாவாம் கற்றுணர்ந்தேதனதுபுகழாற்பிதாவைப்ரகாசஞ்செ
ய்வோன்புத்திரன் - செல்வமிகுகணவனே தெய்வமென்றனுதின
ஞ்சிந்தைசெய்பவள்மனைவியாம் - சினேகிதன்போலவேயன்பு
வைத்துண்மைமொழிசெப்புமவனேசோதரன் - தொல்வளமிகுந்
தநூற்களைதெரிந்துறுதிமொழிசொல்லுமவனேகுருவனும் - சொ
ன்னநெறிதவறுமல்வழிபாடுசெய்துவருதுய்யனேயினியசீடன்
வல்விரகமிஞ்சுசூரனுஞ்சரியுடன்குறவர்வஞ்சியைமணந்தகணவா

சிறுமையிற்பெருமை.

சேற்றிற்பிறந்திடுங்கமலமலர்கடவுளதுதிருமுடியின்மேலிருக்கு
ம்,திகழ்சிப்பியுடலிற் சனித்தமுத்தரசனதுதேகத்தின்மேலிரு
க்கும்-போற்றியபூச்சியின் வாயினூல்பட்டென்றுபூசைக்குநே
சமாகும்-புகலரியவன்விடச்சி லானதேன்றேவர் கொள்புனிதவ
பிஷேகமாகும்-சாற்றியபுலாலொடுபிறந்தகோரோசனை சவாது
புழுகனைவர்க்குமாம்-சாதியீனத்திற்பிறக்கினுங்கற்றோர்கள்சபை
யின்மேல்வட்டமன்றோ-மாற்றிற்சுரத்தினை விழுங்கியாலுடல்குளி
ரவைத்தமெய்ஞ்ஞானமுதலே-மயிலேறிவிளையாடுகுகனே(கும)

செய்யத்தகாதவை.

தானுசரித்துவரு தெய்வமிதுவென்றுபொய்ச் சத்தியஞ்செயில்
விடாது- தன்வீட்டிலேற்றிய விளக்கென்றுமுத்தந் தனைக்கொடு
த்தால்சுடும், ஆனாலுமேலவர்கண்மெத்தவுந் தனதென்றடா
துசெயிற்கெடுதியாம்-ஆனதால்மெத்தப் பழக்கமானாலுஞ்செ
யாதுசெய்தாற்கொன்றிடும்-தீனையினிதென்றுமீதால்விருப்பி
னூற்றேகபீடைகளேதரும்- செகராசர்சனுவென்னவேலாதகாரி

பற்செய்தான்மனம்பொருர்கான்-வாறுபுகழுமொருசோறு
டேழையவிவன் வந்தவதரித்ததலை-மயிலேறிவிளையாடுகுக()

நடுவுநிலைமை.

வந்தவிவகாரத்திலினியபரிதானங்கள்வருமென்றுநேசமென்றும் வஞ்சனைகளொன்றுமைய லோவொன்றுமிக்கதன வானென்றுமேழையென்றும்-இந்தவகையைக்குறித் தொருபக்ஷபாதமோவொள்ளளவுமாத்திடாமல்-எண்ணமுட்டனேவிசிதபுத்தியொடுசாட்சிக்குமேற்கச்சபாசபதமாமுந்தவிருதலையுஞ்சமன்செய்தகோல்போல்மொழிந்திடுற்றருமமதுகாண்முனை வீமனுடல்பாதியிருகந்தனகவென்றுமுன்றருமம்சொன்னதல்லவோ - மைந்தனெனவென்றுமுலைப்பால்கொடுத்திடவளர்ந்தருள்குழந்தைவடிவேல ()

பக்ஷபாதம்.

ஓரவிவகாரமா வந்தவர்முகம்பார்த் துரைப்போர்மனைக்கூராங்காம்,உயர்வெள்ளெருக்குடன்முளைத்தவிடுமவரில்ல முறையுமுரிபாழ்நத்தமாம், தாரணியிலிவர்கள்கிளை நெல்லியிலைபோ லுகுஞ்சமானமாவெழுபிறப்பும்,சந்ததியிலாதழல்வ ரவர்முகத்தினில்மூத்தையலேகுடியிருப்பாள்- பாரமிவரொன்றுபுவிமங்கையுநடுங்குவள்பழித்தவர்மரணமாவார்பகர்முடிவிலேரௌரவாதிநகரத்தனுபவிப்பரெப் போதுமென்பார்வாரமுடலருணகிரிநாதருக்கனுபூதிவைத்தெழுதியருள்குருபராமயிலேறி விளையாடு()

ஒன்றிலாமையாற்சிறவாதவை.

கொங்கையில்லாதவட் கெத்தனைப்பணியுடைமை கூடினும்பெண்மையில்லை,கூறுநிறைகல்வியில் லாமலெத்தனைகவிதை கூறினும்புலமையில்லை,சங்கையில்லாதவர்க் கெத்தனைவிவேகந்தரிக்கினுங்கனதையில்லை-சட்சுவைபதார்த்தவகையுற்றாலுநெய்யிலாச் சாதமுந்திருத்தியில்லை, பங்கயமிலாமலெத் தனைமலர்கள்வாவியிற்பாரித்தாலுமேன்மையில்லை பத்தியில்லாமல்வெகுநியமமாயர்ச்சனைகள்பண்ணினும்பூசையில்லை-மங்கையரிலாமனைக் கெத்தனையருஞ்செல்வம் வரினும்வாழ்க்கையில்லை,மயிலேறிவிளையாடு ()

அளபுபடாதவை

வாரியாழத்தையும்புனலெல்றியுமலைகளையுமானிடர்களெண்ணத்தையும்- மன்னவர்கணினைவையும் புருஷர்யோகங்களையும்வானினுயர்நீளத்தையும்-பாரிலெழுமணலையும் பலபிராணிகளையும்படியாண்டமன்னவரையும் பருப்பதத்தன்னிறையுமீசர்செயலையும்பனிமாரிபொழிதுளியையும்-சீரியதமிழ்ப்புலவர் வாக்கிலெழுகவியையுஞ் சித்தர்தமதுள்ளத்தையும்-தெரிவையர்கள்சிந்தையையு மிவ்வளவெனும்படி தெரிந்தளவிடக்கூடுமோ-வாரிசமட

ற்றைக்குடிகொண்டநெடுமாலுக்கு மருகனெனவந்தமுருகா-மயி லேறிவிளையாடு குகனேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே (௬௬)

பிறர்மனைநயத்தல்.

தற்றாரமன்றியேபரதாரமேநினைவு தனைவைத்தகாமுகர்க்குத், தயையில்லைநேசமில்லைவெட்கமில்லைசமரினிற்றைரியஞ்சற்றுமில்லை அந்தரமில்லைதொடர் முறையில்லைநிலையில்லை யறிவில்லைமரபு மில்லை-யறமில்லைநிதியில்லை யிரவினிற்றனிவழிக் கச்சமோமனதி லில்லை-நந்தாதசனமில்லை யினமில்லையெவருக்கு நட்பில்லைகன மையில்லை-நயமில்லையிளமைதனில்வலுமையில்லைமுத்திபெறுகு ணமில்லையென்பர்கண்டாய் மற்றாரபரிமள சுகந்தாதிபுனையுமணி மார்பனேயருளாளனே- மயிலேறிவிளையாடு குகனேபுல்வய()

மானம்விடாமை

கனபாரமேற்றபி னந்திடுந்தன்றியேகற்றூண்வளைத் திடாது கருதலர்களாலுடைந்தாலுமுயிரளவிலேகனசூரனமரின் முறியா ன்றினமேமரியுக்கவந் துற்றாலும்வேங்கைதான் சீவனளவி ற்கொடாது தீரமானபெரியோர்சரீரங்கள் போயினுஞ்செப்பு முறைதவறிடார்கள்-வனமேறுகவரிமாவுயிர்போகுமளவுந்தன்ம யிரொன்றுங்கொடாது- வாராதவாபத்துவருகினுங்கற்புடைய மாதுநிறைதவறிடவாள்-மனதாரவுனதடைக் கலமென்றகீரற்கு வன்சிறைதவிர்த்தமுருகா- மயிலேறிவிளையாடு குகனேபுல்வய()

திருவருட்சிறப்பு

திருமகள்கடாக்ஷமுள்ளிடாலெவர்க்குஞ் சிறப்புண்டுகனமை யுண்டு-சென்றவழியெல்லாம்பெரும்பாதையாய்விடுஞ்செல்லா தவார்த்தைசொல்லினும் பொருளொருதரும்புமரி யாதையாஞ் செல்வமோ புகல்பெருக்காறுபோலப் புலியின்முன்கண்டுமறி யாதபேர்பழகினவர்போலவே நேசமாவார்பெருமையொடுசா தியினுயர்ச்சிதருமனுதினம்பேரும்ப்ரதிஷ்டையுண்டாம் பிரிய மொழிபகையாளி கூடவுறவாகுவான்பேச்சினிற்பிழைவராது-வ ருமனைநினைத்தபொருள்கைகூடிவருமதிகவல்லமைகண்மிகவுமு ண்டாம்- மயிலேறிவிளையாடு (௬௮)

நட்பநிலை

கதிரவனுதிப்பதெங் கேநளினமெங்கே களித்துளமலர்ந்ததென் ன-கார்மேகமெங்கேபசுந்தோகையெங்கேகருத்திலட்டாணமெ ன்ன மதியமெங்கேபெருங் குமுதமெங்கேமுக மலர்ந்துமகிழ் கொண்டதென்ன வல்லிரவுவிடிவதெங் கேகோழியெங்கேமகிழ் ந்துகூவிடுதலென்ன நிதியாசமெங்கேயிருந்தாலுமவர்களொரு நேசமொன்றாயிருக்கும் நீதிமிகுநல்லோர்களெங்கிருந்தாலுமவ ர்நிறைபக்ஷமறவார்கள்காண் மதிலுடன்கோபுரமும்வாவியும்

புடைசூழமருவுசோணாட்டதிபனே - மயிலேறிவிளையாடுகுக
னேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே (௬௮)

காலமறிதல்

காகம்பகற்காலம்வென்றிடுங்கூகையைக்கனசமுடியரசர்தாமும்-கருதுசயகாலமது கண்டந்தவேளையிற்காரியமுடித்துவிடுவார்மேகமுங்கார்காலமதுகண்டுபயிர்விளையமேன்மேலுமாரிபொழியும் மிக்கானவறிவுளோர் வருதருணகாலத்திலன்றி -யாளருக்குதவுவார்-நாகரிகமுறுகுயில் வசந்தகாலத்திலே நலமென்றுகந்துகூவும் நல்லோர்குறித்ததைப் பதருமலந்தந்த நாளையின்முடிப்பர்கண்டாய்- வாசனையகாலைகள் மாலைபுல்லெனுமுலகவாடிக்கைநிசமல்லவோமயிலேறிவிளையாடு (௬௯)

இடமறிதல்,

தரையதனிலோடுதேர் நீள்கடலிலோடுமோ சலதிமிசையோடுக்கப்பல், தரைமீதிலோடுமோ தண்ணீரிலுறுமுதலைதன்முனைகரிதிற்குமோ,விரைமலர்முடிப்பமரர் வேணியரவினைவெல்லமிகுகருடனாலாகுமோ,வெங்கைகளிருக்கின்றகாடுதனிலுஞ்சாமல்வேறொருவர்செல்லவசமோ, துரைகளைப்பெரியோரையண்டிவாழ்வோர்தமைத் துஷ்டர்பகையென்னசெய்யும், துணைகண்டுசேரிட மறிந்துசேரொன்றைவை சொன்னகதைபொய்யல்லவே,வரையூதுமாயனை யடுத்தலாற்பஞ்சவர்கள்வன்போர்செயித்ததன்றே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகு (௭௰)

ஆக்கைநிலையாமை,

மனுநன்மாந்தாதாமு தனவர்களெல்லாரு மண்மேலிருந்துவாழ்ந்து, மடியாதிருந்தபே ரில்லையவர்தேடியதை வாரிவைத்துவருமில்லை,பனியதனைநம்பியேயேர்பூட்டுகதையெனப்பாழானவுடலைநம்பிப்,பார்மீதிலின்னம்வெகுநாளிருப்போமென்றுபலகோடிநினைவையெண்ணி,அனிதமாய்விருதாவின் மாய்வதேயல்லாமலன்பாகநின்பதத்தை,யர்ச்சித்துமுத்திபெறல் வேண்டுமென்றெண்ணார்களாசைவலையிற்சுழலுவார், வனிதையர்கள்காமாவிகாரமேபகையாகுமற்றுமொருபகையுமுண்டோ,மயிலேறி ()

வேட்டகத்திகழ்ச்சி.

வேட்டகந்தன்னிலேமருகன்வந்திடுமளவின் மென்மேலுமுபசரித்து, விருந்துகள்சமைத்துநெய் பாறயிர்பதார்த்தவகைவேண்டுவதெலாமமைப்பார்ஊட்டமிகுவர்க்கவகைசெய்திடுவர்தயிலமிட்டுறுதியாய்முழுகுவிப்பார்,ஓயாதுதின்னவேபாக்கிலைகொடுத்திவருற்ற நாளுலாகிலோ நாட்டமொரு படியிறங்குவதுபோன்மரியாதைநாளுக்குநாள்குறைவுரும், நகைசெய்வர்மைத்துனர்களவல்பார்போவென்றுநாளுமல்மாமிசொல்வாள்,வா

ட்டமனையாளொருதரும்பாய்மதிப்பளவன்மட்டியிலுமட்டிய
ன்றோ-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயநீடுமலைமேவுகுமரேசனே()

செல்வநிலையாமை,

ஓடமிதேயிடமதூ மணற்கமேடுஞ்சுமிடமு மோடமிசைவருதலுக்கு
ம்,உற்றதோராற்றின்மடு மேடாகுமேடெலா முறுபுனல்கொண்
மடுவாயிடும்,நாடொருமுயர் காடுநாடாகிவிடுநவில்சகடுமேல்
கீழதாம், நடைபூறுசந்தைபல கூடுமிடமேகலையுநல்லில்லுமிரு
ளாய்விடும், நீடபகல்போயடிக்கிரவாகுமிரவும்போய்நிறைபகற்
போதாய்விடும், நிறைபோர்மிடித்திடவர்மிடியோர்செழித்திடுவர்
நிசமல்லவாழ்வுகண்டாய் மாடமனையாரிசனமக்கணிதிபூஷிணமு
மருவுகனவாகுமல்லோ,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு()

பிறந்தாற்பெறும்பேறு,

சடமென்றெடுத்தாற் புவிக்குநல்லவனென்றுநன்பேர் விளங்
கவேண்டும், சதிருடனிதல்லாது மெய்ஞ்ஞானியென்றவதரிக்க
வேவேண்டுமல்லால்,திடமினியானசூர வீரனிவனென்னவே தி
சைமெச்சவேண்டுமல்லால், தேடியெனவருபவர்க் கில்லையென்
னுமலேசெய்யவேவேண்டுமல்லால்,அடைவுடன்பலகல்வி யாரா
ய்ந்துவித்துவானாகவேவேண்டுமல்லால்,அறிவானதுரைமக்களாக
வரவேண்டிவ ரதிகபூபாலனையா, வடகுவடுகிடுகிடென வெரு
கடலுமலையரியமணியுரகன்முடிகணெரிய, மயிலேறிவி (௭௪)

வேசைநிந்தை,

தேடித்தம்வீட்டிற் பணக்காரர்வந்திடிற்றேகசிவன்போலவே
சினேகித்தவும்மையொரு பொழுதுகாணாவிடிற் செல்லுமுதல்
ணமென்றே, கூடிச்சுகிப்பதொன்றுசையும்மேலென்று கூசாம
லாணையிடுவார், கொங்கையைவெடிக்கப் பிடிக்கக்கொடுத்திதழ்
கொடுப்பர்சம்பணமுகப்ப,வேடிக்கைபேசிய கைமுதல்பறித்
தபின்வேறுபடநிந்தைசெய்து,விட்டுவிடப்பேசுவார்தாய்கலகமூ
ட்டியேவிட்டுத்துரத்திவிடுவார், வாடிக்கையாயிந்தவண்டப்பர
த்தையர்மயக்கத்தைநம்பலாமோ, மயிலேறிவிளையாடுகுக(௭௫)

இதற்கிதுஉறுதியெனல்,

கைக்குறுதிவேல்வின் மனைக்குறுதிமனையாள் கவிக்குறுதிபொ
ருளடக்கம்,கன்னியர்தமக்குறுதிகற்புடைமைசொற்குறுதிகண்டி
டிற்சத்தியவசனம்,மெய்க்குறுதிமூலமின் சபைக்குறுதிவித்வச
ம் வேசையர்க் குறுதிதேடல்,வீரருக்குறுதிபெலமூப்பினுக்கு
றுதிபூண்வீரருக்குறுதிதீரம், செய்க்குறுதிநீருபார்க்குறுதிசெங்
கோல்செழும்படைக்குறுதிவேழம்,செல்வந்தனைக்குறுதிபிள்ளைக
ளார்க்குறுதிசேர்ந்திடுஞ்சற்சனர்களாம்,மைக்குறுதியாகியவிழி
க்குறமடந்தைசுரமங்கைமருவுந்தலைவனே,மயிலேறிவிளை (௭௬)

வறுமையிற்சிறுமை,

வறுமைதான்வந்திடிற்றாய்பழுது சொல்லுவாண்மனையாட்டிச
ற்றுமெண்ணாள்வாக்கிற்பிறக்கின்றசொல்லெல்லாம்பொல்லாதவச
னமாய்வந்துவிளையுஞ்சிறுமையெய்தி தொலையா விசாரமேயல்லா
துசிந்தையிற்றைரியமில்லைசெய்யசபைதன்னிலேசென்றுவாவெ
ட்கமாஞ்செல்வரைக்காணினுனும், உறுதிபெறுவீரமுங்குன்றிடும்
விருந்துவரினுயிருடன்செத்தபிணமாம் உலகம்பழித்திடும்பெரு
மையோர்முன்பு சென்றொருவரொடுசெய்திசொன்னான்மறுவச
னமுஞ்சொலார்துன்பினிற்றுன்பமிதுவந்தணுகிடாதருளுவாய்,

தீச்சார்பானவன்மையிழப்பு.

ஆனைதண்ணீரினிழல் பார்த்திடத்தவளைசென் றங்கேகலக்கியுலவும்
ஆயிரம்பேர்கூடி வீடுகட்டிடிலேக மறைகுறளு முடனேவரும்,
ஏனை நற்பெரியோர்கள் போசனஞ்செயுமளவிலீக்கிடந்திசைகே
டதாம், இன்பமிகுபசுவிலே கன்றுசென்றூட்டுதற் கினியகோனா
னுதைக்கும், சேனைமன்னவனொன்னகருமதியமிக்கினுஞ்சிறியோர்
களாற்குறைபடும், சிங்கத்தையும்பெரியரிஷபத்தையும்பகைமை
செய்ததொருநரியல்லவோ, மானையுந்திகழ்தெய்வ யானையுந்தழு
வுமணி மார்பனேயருளாளனே, மயிலேறிவிளையாடு குக (எஅ)

இடையூறுற்றும் பயன்படுமவை.

ஆறுதண்ணீர்வற்றிவிட்டாலுமூற்றுநீரமுதபானங்கொடுக்கும், ஆ
தவனையொருபாதி கட்செவிமறைத்தாலுமப்போதுமுதவிசெய்
வன்- கூறுமதிதேய்பிறைய தாகவேகுறையினுங் குவலயத்திருள்
சிதைக்கும்- கொல்லைதான்சாவிபோய் விட்டாலுமங்குவரு குரு
விக்குமேச்சலுண்டு- வீறுடனுதாரிதான் மிடியானபோதினு
மிகநாடிவருபவர்க்கு-வேறுவகையில்லையென் றுளையாதியன்றள
வியந்துளமகிழ்ந்துதவுவான்- மாறுபடுசூரசங் காரகம்பீரனே வ
டிவேலணிந்தமுருகா-மயிலேறிவிளையாடு குகனேபுல்வய (எகூ)

இன்னவர்க்கிதுவில்லையெனல்.

சார்பிலாதவருக்கு நிலையேதுமுதலிலா தவருக்கிலாபமேது- தய
விலாதவர்தமக் குறவேதுபணமிலா தார்க்கேதுவேசையுறவு-உண
ரிலாதவர்தமக் காசேதுபசிவேளையுண்டிடார்க்குறுதிநிலையே-து
ண்மையில்லாதவர்க் கறமேதுமுயல்விலார்க்குறுவதொருசெல்வ
மேது - சோர்விலாதவருக்கு மற்றுமொருபயமேது சுகமிலார்க்
காசையேது- தூர்க்குணமிலாதவர்க் கெதிராளியேதிடர்செய் து
ஷ்டர்க்கிரக்கமேது, மார்புருவவாலிமே லஸ்திரம்விடுத்தநெடுமா
ன்மருகனேமுருகா- மயிலேறிவிளையாடு குகனேபுல்வய (அய)

இதிலிதமிதுநன்றெனல்.

பஞ்சரித்தருமையறியார்பொருளையெய்தலிற்பலமனைப்பிச்சை
நன்று-பரிவாரவுபசார மில்லாவிருந்தினிற்பட்டினியிருக்கைநன்

றுதஞ்சமொருவருமயலையடு வென்றிதனில்யானையொடுசமர்செய்
துதோற்றனன்று- சரசகுணமில்லாதபெண்களைச்சேர்தலிற்கன்
னியமிழந்தனன்று- அஞ்சலார்தங்களொடு நட்பாயிருப்பதனிலா
வியொன்றுபழகுவதுநன் - றந்தணர்க்காபத்திலுதவாதிருப்பதனிலா
ருயிர்விடுத்தனன்று- வஞ்சகருடன்கூடி வழ்தலிற்றனியே வருந்
திடுஞ்சிறுமைநன்று- மயிலேறிவிளையாடு குகனேபுல்வயலில் (அக)

நிலையாதவை.

கொற்றவர்கள்ராணுவமு மாறுநேராகிய குளங்களுந்தகாசியுறவும்
குணமில்லார்நேசமும்பாம்பொடுபழக்கமுங்குலவுந்திவிளையாட
லும் பற்றலார்தமதிடை வருந்துவிசுவாசமும் பழையதாயாதிநி
னைவும்,பரதாரமாதரி போகமும்பெருகிவரு பாங்கானவாற்று
வரவும்,நம்மொருதீர்ப்புத்தி கேட்கின்றபெருமவு நல்லமதயா
னைநட்பும்,நாவினலுறவு மொருநாள்போகிராநிலைவகணப்
படாதுகண்டாய்,மற்றுமொருதுணையில்லை நீதுணையெனப்பரவு
ம்வானவர்கள்சிறைமீட்டவா,மயிலேறிவிளையாடு குகனே (அஉ)

நற்புலவர்தீப்புலவர்செயல்.

மிக்கானசோலையிற் குயில்சென்றுமாங்கனிவிருப்பமொடுதேடு
நாடும்,மிடைகருங்காகங்க ளெக்கணிபிருந்தாலும் வேப்பங்கனிக்
குநாடும்,எக்காலும்வரிவண்டு பங்கேருகத்தினிலிருக்கின்றதேனை
நாடும், எத்தனைசுகந்தவகை யுற்றாலுமுருள்வண் டீனந்தான்மலத்
தைநாடும், தக்கோர்பொருசுவை நயங்களெங்கேயென்று தாம்
பார்த்துகந்துகொள்வார், தாழ்வானவன்கண்ணர் குற்றமெங்கே
யென்று தமிழிலாராய்வர்கண்டாய்,மைக்காவிவிழிமாதுதெய்வா
னையுங்குறவர் வள்ளியுந்தழுவதலைவா,மயிலேறிவிளையாடு (அங)

தாழ்தற்பெருமை.

வேங்கைகள்பதுங்குதலு மாமுகிலொதுங்குதலும்வரிசிலைகுனிந்
திடுதலும், மேடமதகன்றிடலும் யானைகளொடுங்குதலும் வெள்
விடைகள்துள்ளிவிழலும்,மூங்கில்கள்வணங்குதலு மேலவரிணங்
குதலுமுனிவர்கணயந்துகொளலும்,முதிர்படையொதுங்குதலு
ம் வினைஞர்களடங்குதலு மூதறிஞர்பயந்திடுதம், ஆங்காவசாய்
குதலு மகிழ்மலருலர்ந்திடலு மாயர்குழல்குப்படலும், அம்புவி
யிலிவைகாரி யங்களுக்கல்லாம லதனுவிளைப்புவருமோ,மாங்கனி
க்காவரனைவலமதுபுரிந்துவளர்மதகரிக்கிளையமுருகா,மயிலேறி)

தெய்வச்செயல்.

சோடாய்மரத்திற் புறாவிரண்டிருந்திடத் துறவுகண்டேவேடுவன்,
தோலாமலவையெய்ய வேண்டுமென்றுருகணை தொடுத்துவில்
வாங்கிநிற்க,ஊடாடிமேலே யெழும்பிடுலடிப்பதற் குலவுராசா
ளிகூட, உயரப்பறந்துகொண் டேதிரியவப்போ துதைத்தகிலை

வேடனடியில்-சேடாகவல்விஷந் தீண்டவேயவன்விழச் சிலையிற்றொடுத்தவாளி சென்றிராசாளிமெய் தைத்துவிழவவ்விருசிறைப்புறவாழ்ந்தவன்றே- வாடாமலிவையெலாஞ் சிவன்செயல்களல்லாதுன் மனச்செயலினாலும்வருமோ-மயிலேறிவிளையாடு(அரு(

பாடலியல்பு.

எழுத்தசைகள்சீர்தளைக ளடிதொடைகள்சிதையா திருக்கவேவேண்டுமப்பால், ஈரைம்பொருத்தமொடுமதுரமாய்ப்பளபளப் பினியசொற்களமையவேண்டும்- அழுத்தமிகுகுறளினுக் கொப்பாகவேபொருளடக்கமுமிருக்கவேண்டும்- அம்பாணபாவினமிசைந்திவால்வேண்டுமு னலங்காரமுற்றதுறையில் - பழுத்துளமுவந்தோசையுற்றுவரல்வேண்டும் படிக்குமிசை|கூடல்வேண்டும்-பாங்காகவின்னவைபொருந்திடச் சொற்கவிதை பாடிற்சிறப்பென்பர்காண்-மழுத்திரனுஞ்செங்கைதனில்வைத்தகங்காளனருண்மைந்தனெனவந்தமுருகா-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடும()

விபூதிதரிக்கு முறைமை.

பத்தியொடுசிவசிவாவென்றுதிருநீற்றைப்பரிந்துகையாலெடுத்துப்-பாரினில்விழாதபடி யண்ணாந்துசெவியொடுபெருத்தபுயமீதிலொழுக-நித்தமூவிரல்களாநெற்றியிழமூந்தலுறநினைவாய்த்தரிப்பவர்க்கு-நீடுவினையணுகாது தேகபரிசுத்தமா நீங்காமணிமலனங்கே-சத்தியொடுநித்தம்விளையாடுவன்முகத்திலேதாண்டவஞ்செய்யுந்திரு- சஞ்சலம்வரா துபாகதியுதவுமியவரையே சத்தியஞ்சிவனென்னலாம்- மத்தினியமேருவெனவைத்தமுதினைக்கடையுமான்மருகனேமுருகா மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீ()

விபூதிவாங்கு முறைமை

பரிதனிலிருந்துமுயல்சிவிகையிலிருந்துமுயர்பல்கையிலிருந்துமிகவே-பாங்கானவம்பலந்தனியேயிருந்தும். பருத்ததிண்ணையிலிருந்தும்-தெரிவொடுகொடுப்பவர்கள்கீழ்நிற்கமேனின்று திருநீறுவாங்கியிடினும்-செங்கையென்றுலும்விரல் மூன்றுலும்வாங்கினுந்திகழ்தம்பலத்திரேனும் அரியதொருபாதையினடக்கின்றபோதினுமசுத்தநிலமானவதினும்- அங்கேதரிக்கினுந்தந்திடிற்றள்ளினுமவர்க்கு நரகென்பர்கண்டாய்- வரிவிழிமடந்தைகுறவள்ளிநாயகிதனை மணந்துமகிழ்சகநாதனே மயிலேறிவிளையாடு ()

இவ்வுறுப்பாற் பயனில்லெனல்.

தேவாலயஞ்சுற்றிடாதகாலென்னகால் தெரிசியாக்கண்ணென்னகண்-தினமுமேநின்கமலபாதத்தைநினையாத சிந்தைதானென்னசிந்தை மேவாகமஞ்சிவபுராணமவைகேளாமல் விட்டசெவியென்னசெவிகள்-விமலனைவணங்காத. சென்னியென் சென்னிபணிவிடைசெயாக்கையென்னகை-நாவாரநினையேத்திடாதவாயென்

னவாய்நற்றீர்த்தமூழ்காவுட- னிலத்தென்னவுடல்பாவியாகிய
சனனதன்னினிற்பலனேதுகாண்-மாவாகிவேலைதனில்வருசூரன்
மார்புருவவடிவேலைவிட்டமுருகா-மயிலேறிவிளையாடுகுகனே()

நற்பொருளொடு தீப்பொருள்பிறத்தல்.

கோகனகமங்கையுடன்மூத்தவள்பிறந்தென்ன குலவுமாட்டின்க
ணதர்தான்-கூடப்பிறந்தென்ன தண்ணீரினுடனே கொடும்பாசி
யுற்றுமென்ன-மாகருணைமுகிலொடுநஞ்சப்பிறந்தென்னவல்லி
ரும்பிற்றுருத்தான்-வந்தேபிறந்தென்ன நறுமார்தனின்மொக்
குள்வளமொடுபிறந்தென்னவுண்-பாகமிகுசெந்நெலொடுபதர்தா
ன்பிறந்தென்ன பன்னுமொருதாய்வயிற்றிற் - பண்புறுவிவேகி
யொடுகயவர்கள்பிறந்தென்ன பலனேதுமில்லையன்றே-மாகன
கமேருவைச் சிலையெனவளைத்தசிவன் மைந்தனெனவந்தமுருகா
மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரே (௬௰)

தன்னினத்தாலழிவு.

குலமானசம்மட்டிகுறடுகைக்குதவியாய்க்கூரிரும்புகளைவெல்
லும்-கோடாலிதன்னுளேமரமதுநுழைந்துதன் கோத்திரமெலா
மழிக்கும்-நலமானபார்வைசேர் குருவியானதுவந்துதன்னுப
றவைகளாக்கும் - நட்புடன்வளர்ந்தகலைமானென்று சென்று
தன்னவில்சாதிதனையிழுக்கும்-உலவுநற்குடிதனிற் கோளர்களிரு
ந்துகொண்டுற்றுறையீட்டழிப்பர்-உளவனில்லாமலூ ரழியாதெனச்
சொல்லுமுலகமொழிநிசமல்லவோ-வலமாகவந்தா னிடத்தினி
ற்கனிகொண்ட மதயானைதன்சோதரா-மயிலேறிவிளையாடு(௬க)

வீணுக்குழைத்தல்

குயின்முட்டைதனதென்று காக்கையடைகாக்குங்குணம்போலு
மீக்களெல்லாம்-கூடியேதர்முண்ணவேண்டுமென்றேதினங்கூடு
ய்த்தநறவுபோலும்-பயில்சோரருக்குப் பிறந்திடத்தாம்பெற்ற
பாலனென்றட்சுகுதியே-பாராட்டிமுத்தமிட்டன்பாய்வளர்த்தி
டும்பண்பிலாப்புருஷர்போலும்- துயிலின்றிநிதிகளைத்தேடியே
யொருவர்பாற்கூட்டுத்தெறித்திடாமல்- தொகைபண்ணிவைத்
திவர்கைக்கொண்டுபோகவருசொந்தமானவர்வேறுகாண் - வ
யிரமொடு சூரனைச் சங்காரமே செய்து வானவர்க்குதவுதலைவா-
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே()

இதுசேரினிதுபயன்படாதெனல்.

அனலுக்குளேவிட்ட நெய்யும்பெருக்கான வாற்றிற்கரைத்தபுளி
யும் - அரிதானசமரிற்கவிழ்த்திட்டபாலும் வருமலகைகட்டிடுபூ
சையும் சுழல்பெருங்காற்றினில் வெடித்தபஞ்சும்மணற் சொரி
நறும்பனிநீருநீள்,சொல்லரியகாட்டுக் கெறித்தநிலவுங்கடல்சூழி
க்குளேவிடுகப்பலும்- விழலுக்கிறைத்திட்ட தண்ணீருமிகமாய

வேசைக்களித்தபொருளும்-வீணருக்கேசெய்தநன்றியும்பலனி
ல்லைவிருதாவிதென்பர்கண்டாய்-மழலைப்பசுங்கிள்ளை முன்கைம
லைமங்கைதரு வண்ணக்குழந்தைமுருகா-மயிலேறிவிளையாடுகுக
னேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௯௩)

கைவிடத்தகாதவர்

அன்னைசுற்றங்களை மற்றைநாண்முதலாவடுத்தவருபழையோ
ரையும்அடிபகைவரிற்றப்பிவந்தவொருவேந்தனையுமன்பானபெ
ரியோரையுந்தன்னைநப் பினரையு மேழையானவரையுஞ்சார்ந்த
தமறையோர்தம்மையும், தருணமிதுவென்றுநல் லாபத்துவே
ளையிற் சரணம்புகுந்தோரையும், நன்னயமதாகமுன் னுதவிசெ
ய்தோரையு நாளுந்தனக்குறுதியாய், நத்துசேவகனையுங் காப்ப
தல்லாதுகை நழுகவிடலாகாதுகாண், மன்னயினுமினியசெஞ்
சேவலுஞ்செங்கைமலர் வைத்தசரவணபூபனே, மயி (௯௪)

தகாதசெயல்

அண்டிவருமூற்றார் பசித்தங்கிருக்கவே யன்னியர்க்குதவுவோ
ரும்ஆசுதபுபெரியோர்செய் நேசத்தைவிட்டுபி னற்பரையடுத்த
பேரும், கொண்டவொருமனையா ளிருக்கப்பரத்தையைக் கொ
ண்டாடிமருவுவோரும்,கூருறுசற்பாத்திர மிருக்கமிகுபானமது
குணமிலார்க்கீந்தபேரும்,கண்டுவருபுதியோரை நம்பியேபழைய
ரைக்கைவிட்டிருந்தபேரும், கரிவாலைவிட்டுநரி வால்பற்றிநதிநீர்
கடக்கின்றமரியாதைகாண்,வண்டடர்கடப்பமலர் மாலிகாபரண
மணிமார்பனேயருளாளனே, மயிலேறிவிளையாடுகுக (௯௫)

நல்லோர்முறை

கூடியேசோதரர்கள் வாழ்தலானுந்தகுகுழந்தைபல பெறுத
லானும்,குணமாகவேபிச்சையிட்டுண்கையானுங் கொடும்பிதிர்க்கி
டுதலானும், தேடியேதெய்வங்களுக்கீதலானுந்தியாகங்கொடுத்த
லானும்,சிறியோர்கள்செய்திடும் பிழையைப்பொறுத்துச்சினத்
தைத்தவிர்த்தலானும்,தாடியேதாழ்வாய்வணங்கிடுதலானுமிகநல்
லவார்த்தைசொல்லலானும்நன்மையேதருமலாற்றாழ்ச்சிகள்வரா
விவைநல்லோர்கள்செயுமுறைமைகாண், வாடிமனநொந்துதமி
ழ் சொன்னநக்கீரன்முன் வந்துதவிசெய்தமுருகா மயிலே (௯௬)

அடைக்கலங்காத்தல்

அஞ்சலெனுநாயினுடறருமன்சுமந்துமுன் னூற்றைக்கடத்து
வித்தான் அடைக்கலமெனுங்கயற் காகநெடுமாலுடனருச்சுனன்
சமர்புரிந்தான்,தஞ்சமெனவந்திடு புறவுக்குமின்சிபிசரீரந்தனை
க்கொடுத்தான், தடமலைச்சிறகரிந் தவனைமுன்காக்கத் ததீசிமு
னிகென்பளித்தான், இன்சொலுடனேபூத தயவுடையராயி

னேரொவருக்குமாபத்திலே, இனியகண்சிவனைவிடுத்தாகிலுங்காத்திரங்கிரக்ஷிப்பரன்றோ, வஞ்சகிரவுஞ்சமொரு தாருகன்சிங்கமுகன்வளசூரனுடல்கீண்டவா, மயிலேறிவிளையாடு (௯௭)

யோக்கியாயோக்கியம்

பாலினொடுதேன்வந்து சேரில்ருசியதிகமாம் பருகுநீர்சேரிலென்றும், பவளத்தினிடைமுத்தை வைத்திடிற்சோபிதப் படிகமணிக்காக்கிலென்றும் மேலினியுமன்னர்பால் யானைசேர்வது கனைதமேஷமது சேரிலென்றும், மிக்கானதங்கத்தினமணியுமிற்பெருமைவெண்கல்லமுத்திலென்றும்வாலிபமிஞோர்களுடனிளைஞோர்கள்சேரினலம்வளைகிழவர்சேரிலென்றும், மருவுநல்லோரிடப்பெரியோர்வரிற்பிரியம் வருகயவர்சேரிலென்றும்மாலிகை தரித்தமணிமார்பனேதெய்வானைவள்ளிக்குவாய்த்தகணவா, மயி(

பெரியோரியல்பு

அன்னதானஞ்செய்தல் பெரியோர்சொல்வழிநிற்ற லாபத்தில்வந்தபேருக், கபயங்கொடுத்திடுத னல்லினஞ்சேர்ந்திடுதலாசிரியன்வழிநின்றவன், சொன்னமொழிதவறாதுசெய்திடுதல்தாய் தந்தைதுணையடியருச்சனைசெயல் சோம்பலில்லாமலுயிர்போகினும்வாய்மைமொழி தொல்புவியி னொட்டிவிடுதல், மன்னனைச் சேர்ந்தொழுகல்கற்புடையமனைவியொடுவைகினுந்தாமரையிலை மருவுநீரொனவுறுத லிவையெலாமேலவர்த மாண்பென் றுரைப்பரன்றோ, வண்மையின்மேலிவர்ந்திவ்வுலகையொருநொடியில் வலமாகவந்தமுருகா, மயிலேறிவிளையாடுகுகனேபுல (௯௯)

நூற்பயன்

வன்னமயிலேறிவரு வேலாயுதக்கடவுள் மலைமேலுகந்தமுருகன், வள்ளிக்கொடிக்கினிய வேங்கைமரமாகினோன்வானவர்கள் சேனாபதி - கன்னன்மொழியுமையாடிருப்புதல்வனரன்மகன்கங்கைபெற்றருள்புத்திரன், கணபதிக்கிளையவொரு மெய்ஞ்ஞான தேசிகக்கடவுளாவினன்குடியினான், பன்னரியபுல்வயலில்வாழ்குமரேசர்மேற் பரிந்துகுருபாததாசன், பாங்கானதமிழாசிரியவிருத்தத்தினறை பாடலொருநூறுநாடி, நன்னயமதாகப்படித்தபேர்கேட்டபேர் நாடொறுங்கற்றபேர்கள், ஞானயோகம்பெறுவர் பதவியாவும்பெறுவர் நன்முத்தியும்பெறுவரே (௱)

குமரேசர் சதகம்

முற்றிற்று.